(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(1).] **பாராளுமன்றம்**

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2020 செப்தெம்பர் 04 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2020 செப்தெம்பர் 22, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1978 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பாராளுமன்றம் தொடக்கம் ஒன்பதாவது பாராளுமன்றம் வரை ஒவ்வொரு பாராளுமன்றத்திற்கும் ஏதுவாக நியமிக்கப்பட்ட அமைச்சரவை அந்தஸ்துள்ள, இராஜாங்க மற்றும் பிரதி

(i) அமைச்சர்களின் எண்ணிக்கை:

(ii) பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை;

வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை, சம்பந்தப்பட்ட அமைச்சரவையில் இருந்த மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கையின் வீதமாக தனித்தனியாக குறிப்பிடுவாரா என்பதையும்;

(ii) நாட்டில் தற்போதுள்ள பெண்களின் குடித்தொகை வீதத்துக்கு நிகரான வகையில் நியாயமானதொரு பிரதிநிதித்துவம் பெண்களுக்கு அமைச்சரவையில் கிடைக்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

49/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இப்பாடசாலைகளில் தற்சமயம் உயர்தர தொழில்நுட்ப பாடப் பிரிவை கற்றக் கூடிய வசதிகள் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) பதுளை மாவட்டத்தில் உயர்தர தொழில்நுட்ப பாடங்களை கற்கக்கூடிய வசதிகளை மேலும் விரிவாக்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் வழிமுறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

92/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுரங்கப் பாதைகள் வலையமைப்பொன்று உள்ளதென்பதையும்;

(ii) இந்த சுரங்கப் பாதைகள் தொடர்பில் முறையான ஆய்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் இடம்பெறாத காரணத்தினால் அவை அழிவடைகின்றதென்பதையும்;

(iii) இது தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொண்டு பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகள், போக்குவரத்து செயற்பாடுகள் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு பயன்படுத்த முடியுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுரங்கப் பாதைகள் தொடர்பிலான ஆய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) அதற்கென செலவு செய்ய எதிர்பார்க்கின்ற நிதித் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள சுரங்கப் பாதைகளை பாதுகாப்பதற்கென அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) அதற்காக செலவிட எதிர்பார்க்கின்ற நிதித் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

111/2020

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களில் இருந்து 5 ஆந் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ஆ) (i) 2019 ஆம் ஆண்டில் 5 ஆந் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையந்து, உதவித் தொகை பெறும் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களுக்கு உதவித்தொகை வழங்குவதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அப்பணத்தொகையிலிருந்து உரியவாறு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) 2020 ஆம் ஆண்டுக்காக உதவித்தொகை வழங்கும் பொருட்டு எவ்வளவு பணத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) புலமைப் பரிசில் பெறுநர்களுக்கு உரிய காலப்பகுதியினுள் உதவித்தொகை வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்களை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை கொழும்பு, இரத்தினபுரி, காலி, மாத்தறை, கண்டி, குருணாகல், யாழ்ப்பாணம் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில் 5 ஆம் தரத்தினதும் 6 ஆம் தரத்தினதும் ஒத்த வகுப்புகளின் எண்ணிக்கை, வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை மேற் குறிப்பிட்ட பாடசாலைகளில்,

(i) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளிகள் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தரம் 6 இற்கு சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தரம் 6 இற்கு சேர்ந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில், புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்ந்த மாணவர்களின் சதவீதம் எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி பாடசாலைகளில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை தரம் 6 இற்கு புலமைப் பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில் அல்லாமல் ஆரம்பப் பிரிவிலிருந்து வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

53/' 2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அரசுக்கு உரித்தான கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகாரசபைகள் போன்ற நியாயாதிக்க நிறுவனங்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் தற்போதுள்ள தவிசாளர்கள் மற்றும் பணிப்பாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி தவிசாளர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை நியமனம் செய்யும் போது பின்பற்றிய நடவடிக்கைமுறை யாதென்பதையும்;

(v) அந்நிறுவனங்களை நிதிரீதியாகப் பலப்படுத்துவதற்கு அமைச்சு எடுக்கவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

96/2020

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹம்பாந்தோட்டை, ரிதியகம சபாரிப் பூங்காவினை மேலும் முன்னேற்றுவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக செலவு செய்ய எதிர்பார்க்கும் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இப்பூங்காவிலுள்ள மிருகங்களுக்கு சிகிச்சையளிப்பதற்குப் போதுமான வைத்தியசாலை வசதிகள் உள்ளனவா என்பதையும்;

(ii) வைத்தியசாலை வசதிகளை மேலும் முன்னேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்காகச் செலவு செய்ய எதிர்பார்க்கும் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2020 செப்தெம்பர் 23, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2/2020

கௌரவ ஹேஷா விதானகே,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டுக்கு ரின் மீன் இறக்குமதி செய்யும் நாடுகள் யாவை என்பதையும்;

(ii) ரின் மீன் இறக்குமதி செய்யும் இந்நாட்டு நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) 2019 ஆம் ஆண்டில், நுகர்வுக்குப் பொருத்தமற்ற ரின் மீன் இறக்குமதி செய்த சந்தர்ப்பங்கள் யாவை என்பதையும்;

(ii) அவற்றை இறக்குமதி செய்த நிறுவனங்கள் மற்றும் அளவுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) உரிய இறக்குமதி நடவடிக்கைகளுக்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட பாவனைக்கு பொருத்தமற்ற ரின் மீன் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் நுகர்வுக்குப் பொருத்தமற்ற ரின் மீன் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், அவ்விறக்குமதிகளை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

50/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள அரசாங்க பாடசாலைகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பாடத்திற்கும் ஏற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்சமயம் கடமையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பதுளை மாவட்டத்தில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஏற்ப தற்சமயம் நிலவும் வெற்றிடங்கள் யாதென்பதையும்;

(v) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

93/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள சமூக பொலிஸ் அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த அலகுகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) சமூக பொலிஸ் அலகினூடாக பெற்றுக் கொள்ளக் கூடிய சேவைகள் தொடர்பில் மக்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) சமூக பொலிஸ் அலகுகளின் கடந்த வருட முன்னேற்றம் தொடர்பில் திருப்தியடைய முடியுமா என்பதையும்;

(ii) 2018 மற்றும் 2019 ஆம் வருடங்களில் சமூக பொலிஸ் அலகுகளினால் மேற்கொள்ளப்பட்ட சேவைகளின் நிதி ரீதியான பெறுமதி அளவீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன் நிதி ரீதியான பெறுமதி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) சமூக பொலிஸ் அலகுகளின் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் வகையில் புதிய சட்டமொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், புதிய சட்டமொன்றினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

112/2020

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இன்றளவில் சமுர்த்தி நிவாரணம் பெறும் வலுவூட்டப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அதிகளவான குடும்பங்கள், சமுர்த்தி நிவராணத்தை பெறும் நோக்கத்துடன் விண்ணப்பித்துள்ளன என்பதனை அவர் அறிவாரா?

(இ) (i) அக்காத்திருப்பு பட்டியலில் உள்ள குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில் எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறி பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி அறநெறி பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற அனுகூலங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் தொண்டர் அடிப்படையிலா சேவையாற்றுகின்றார்கள் என்பதையும்;

(iv) ஆமெனில், அறநெறி பாடசாலை ஆசிரியர்களின் நலனோம்புக்கைக்காக திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2020 செப்தெம்பர் 24, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

3/2020

கௌரவ ஹேஷா விதானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2019 ஆம் அண்டில், பயணிகள் போக்குவரத்திற்காக;

(i) புகையிரதத்தைப் பயன்படுத்திய பயணிகளின் எண்ணிக்கையையும்;

(ii) பயணிகள் போக்குவரத்தினால் கிடைத்த வருமானத்தையும்;

(iii) அச்சிடப்பட்ட புகையிரத அனுமதிச் சீட்டுக்களின் எண்ணிக்கையையும்;

(iv) புகையிரத அனுமதிச் சீட்டுக்களை அச்சிடுவதற்காக செலவிட்ட தொகையையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) பயணிகள் போக்குவரத்திற்காக நாளொன்றில் ஈடுபடுத்த வேண்டிய புகையிரதப் பயணத்தடவைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) பொதுவாக நாளொன்றில் ஈடுபடுத்தப்படும் புகையிரதப் பயணத்தடவைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

51/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் முதலாவது கொவிட்-19 நோயாளி அடையாளம் காணப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அத்திகதி முதல் இன்று வரை நாளாந்தம் அடையாளம் காணப்பட்ட கொவிட்-19 தொற்றியுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) அத்திகதி முதல் நாளாந்தம் மேற்கொள்ளப்பட்ட பீ.சீ.ஆர். (PCR - Polymerase Chain Reaction) பரிசோதனைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) கொவிட்-19 நோயை தடுப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

94/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலக நாடுகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் உயிரியல் ஆயுதப் பாவனை தடைசெய்யப்பட்டிருந்தாலும் பல்வேறான அரசியல் மற்றும் வர்த்தக உத்திகளுக்காக இரகசியமாக தற்போதும் பயன்படுத்தப்படுகின்றது என்பதையும்;

(ii) இலங்கை உட்பட குறை அபிவிருத்தி நாடுகள் இந்த உயிரியல் ஆயுதங்களை பரீட்சித்துப் பார்ப்பதற்கான நாடுகளாக இலக்கு வைக்கப்படலாம் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) உயிரியல் ஆயுதத் தாக்குதல்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

113/2020

கௌரவ சாந்த பண்டார,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீதி அமைச்சினால் சமாதான நீதவான் நியமனங்கள் வழங்கப்படுகின்றது என்பதையும்;

(ii) சமாதான நீதவான்கள் பாரிய சமூக பணியாற்றுகின்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) சமாதான நீதவான்களை நியமிக்கும் போது கருத்திற் கொள்ளும் ஆகக் குறைந்த கல்வித் தகைமைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) க.பொ.த.(சா.த) கல்வித் தகைமையுடைய சமூக சேவையாளர்கள் பலர் கிராமிய மட்டத்தில் இருக்கின்றனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அவ்வாறான சமூக சேவையாளர்களுக்கு சமாதான நீதவான் பதவி வழங்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

7/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 முதல் இதுவரையில் அழிக்கப்பட்டுள்ள தொல்பொருள் தளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி தளங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி தொல்பொருள் தளங்களை அழிப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி தொல்பொருள் தளங்களை அழித்த நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைகள் யாவையென்பதையும்;

(vi) அழிக்கப்பட்டுள்ள, ஆனால் அதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் அடையாளம் காணப்படாதுள்ள தொல்பொருள் தளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vii) நாட்டின் வரலாற்று பெருமையை பாதுகாக்கும் தொல்பொருள் தளங்களை அழிப்பதற்கு எதிராக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2020 செப்தெம்பர் 25, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

4/2020

கௌரவ ஹேஷா விதானகே,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மத்திய அதிவேக நெடுஞ்சாலையின், குருணாகல் தொடக்கம் கலகெதர வரை நிர்மாணிக்கப்படுகின்ற பகுதியின்,

(i) முழுத் தூரம் எவ்வளவென்பதையும்;

(ii) மதிப்பிடப்பட்ட முழுச் செலவு எவ்வளவென்பதையும்;

(iii) நுழைவு மற்றும் வெளியேறல் வாயில்கள் தாபிக்கப்படும் இடங்கள் யாவை என்பதையும்;

(iv) நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுகின்ற மற்றும் நிறைவு செய்வதற்கு உத்தேசித்துள்ள திகதிகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அதிவேக நெடுஞ்சாலையின் மேற்படி பகுதிக்காக இதுவரை,

(i) சுவீகரிக்கப்பட்ட காணியின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) செலுத்தப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) செலுத்தப்பட வேண்டியுள்ள இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மேலும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

52/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது வெளிநாடுகளில் உள்ள இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்கள் சேவையாற்றுகின்ற நாடுகளின் பெயர்கள் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நாட்டிலும் சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொவிட் 19 தொற்று காரணமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற இலங்கை ஊழியர்களின் நலநோம்புகைக்காக அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அவர்களை இந்நாட்டுக்கு அழைத்துவருவதற்கு அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

95/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கடற்படையின் சிவில் நிருவாக உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு இணைந்ததாக ஒப்பந்த/ பதில்/ அமைய அடிப்படையில் பாரிய எண்ணிக்கையிலானோர் சேவையாற்றுகின்றனர் என்பதையும்;

(ii) அவர்கள் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கடற்படை பிரிவுகளில் உப அலுவலகங்கள் மற்றும் கடற்படை வைத்தியசாலைகளில் பணியாற்றுகின்றார்கள் என்பதையும்;

(iii) நாளாந்த அடிப்படையில் அவர்களுக்கு சம்பளம் செலுத்தப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) அவர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்குரிய நடவடிக்கைகள் எத்திகதியிலிருந்து மேற்கொள்ளப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8/2020

கௌரவ ஹேஷா விதானகே,— சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பின்னவல யானை சரணாலயத்தை பார்வையிடுவதற்கு ஏராளமான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் வருகை தருகிறார்கள் என்பதையும்;

(ii) இந்த நிறுவனம் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்துக்கு கூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் பின்னவல யானை சரணாயலத்தை பார்வையிடுவதற்காக வருகை தந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு காலாண்டு ரீதியாகவும் வெவ்வேறாகவும் யாதென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் இதனால் கிடைக்கப்பெற்றுள்ள வருமானம் ஒவ்வொரு வருடத்துக்கும் காலாண்டு ரீதியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பின்னவல யானை சரணாலயத்தை பார்வையிடுவதற்காக வருகை தரும் உல்லாசப்பயணிகளுக்கு யானைக் குட்டிகளுக்கு பால் ஊட்டுவதற்காக வழங்கப்பட்ட வாய்ப்பு தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) யானைக் குட்டிகளுக்கு பால் ஊட்டுவதற்காக உல்லாசப்பயணிகளுக்கு வாய்ப்பு வழங்காமையினால் நிறுவனத்துக்கு வருடாந்தம் ஏற்படும் நட்டம் யாதென்பதையும்;

(iv) இலங்கைக்கு பெறுமதிமிக்க ஒரு வளமான பின்னவல யானை சரணாலயத்தை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்பதையும்;

(v) ஆமெனில், குறிப்பிட்ட வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?